## முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருப்பூர்
## O.S. No.45/2021

**வா.சா.3 / P.சரவணக்குமார் / 22.12.2023**

**வாதி தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி**

**எனக்கு வழங்கப்பட்ட அதிகார கடிதம் மூ.சா.ஆ.5. தற்போது டிடிஎஸ் நம்பரின் அடிப்டையில் ஆர்.அனுஷா, கார்த்திக், திருப்பூர் பி.வி.ரவி ஆகியோரது 2018–2019 க்கானது வரிவிதிப்பு ஆண்டு தாக்கல் செய்கிறேன். அது மூ.சா.ஆ.6, மூ.சா.ஆ.7, மூ.சா.ஆ.8.** என்ன விதமான Transaction என்பதற்கு டிடிஎஸ் ரிட்டனில் செக்சன் குறிப்பிடப்பட்டிருக்கும். மேற்கண்ட ஆவணங்களில் Transaction 194 IA. 194C, என குறிப்பிடப்பட்டுள்ளது. 194 IA Property Transaction யை குறிக்கும் 194C என்பது ஒப்பந்தத்தின் கீழான பரிவர்த்தனையை குறிக்கும். ஆரம்பத்தில் 194 சி மட்டுமே குறிப்பிடப்பட்டிருந்தது. அதன்பிறகு அது திருத்தம் செய்து 194 IA வாக மாற்றப்பட்டுள்ளது. எப்போது திருத்தப்பட்டுள்ளது என்ற விவரம் மேற்கண்ட ஆவணத்தில் இல்லை. 3 டிடிஎஸ்சிலும் அதேபோல் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. Property Return சம்மந்தமான டிடிஎஸ் Scrutiny செய்யும் போது அந்த சொத்திற்குண்டான ஆவணத்தை வாங்கி பாரத்து நாங்கள் சரிபார்ப்போம். குறிப்பிட்ட தொகைக்கு மேல் நடைபெறும் சொத்து சம்மந்தமான பதிவு பரிவர்த்தனைகள் பதிவாளர் அலுவலகத்திலிருந்து எங்களுக்கு தெரிவிக்க வேண்டும என்றால் சரிதான். ஒரு குறிப்பிட்ட ஆவணத்தில் அடிப்படையில் டிடிஎஸ் தொகை செலுத்தப்பட்டிருந்தால் அந்த ஆவணத்தை உத்தேசித்து தான் இந்த சட்டப்பிரிவு குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரிதான். இந்த டிடிஎஸ்யை பொறுத்த வரை ஆவணத்தை பார்த்து என்ட்ரி செய்ததாக குறிப்பில்லை என்றால் சரிதான். விவசாய நிலங்களுக்கு டிடிஎஸ் வராது என்றால் சரிதான்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சியின் வாக்குமூலம் என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2023.12.22 19:00:52 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருப்பூர்.